**செய்தி வெளியீடு எண்:241** **நாள்: 27.04.2017**

**கூட்டுறவு நிறுவனங்களில் அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.**

**மே 2017 முதல் விவசாய உறுப்பினர்களுக்கு Rupay Card வழங்கப்படும் இதன் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகளின் ATM களிலும் பயன்படுத்தி பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு வழிவகை செய்துள்ளது.**

**கூட்டுறவுத் துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தகவல்**

**••••••••**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (27.4.2017) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கிழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த அரசு விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திடும் பொருட்டும், தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை உருவாக்கி, இந்திய அளவில் தமிழகத்தை முதல் மாநிலமாக உயர்த்துவதற்கு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, 2011–12 முதல் 31.3.2017 வரையிலான 6 ஆண்டு காலத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக 58,57,408 விவசாயிகளுக்கு ரூ.27,442.22 கோடி அளவிற்கு பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களில் சிறு குறு விவசாயிகள் பயிர்க் கடன் பெற்று 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த பயிர்க்கடனை தள்ளுபடி செய்ததன் மூலம் 12,02,075 விவசாயிகள் ரூ.5,318.78 கோடி தள்ளுபடியாகப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

மேலும், இந்திய ரிசர்வு வங்கி 8.11.2016 அன்று புழக்கத்திலிருந்த 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் 9.11.2016 முதல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிவித்ததைத் தொடர்ந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களை, மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் உறுப்பினராக்கி, அதன் மூலம் பயிர்க்கடனை வழங்கி இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக செயல்படுத்திட ஆணையிட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் 23.11.2016 முதல் 31.3.2017 வரை 3,48,323 விவசாய உறுப்பினர்களுக்கு ரூ.1,640.79 கோடி கடன் வழங்கப்பட்டது.

நடப்பாண்டில் (2017–18) கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக ரூ.7000 கோடி பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் பல்வேறு நோக்கங்களுக்காக கடன் உதவி பெற்று திருப்பிச் செலுத்த இயலாமல் 31.3.2014 அன்று தவணை தவறிய 5,453 கடன்தாரர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் ஒரு முறை கடன் தீர்வு திட்டம் 2014ல் அறிவிக்கப்பட்டு, பின்னர், 31.3.2017 வரை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. இதுவரை, 2425 விவசாயிகள் ரூ.52.21 கோடி கடன் தொகையினை முழுமையாகத் திரும்ப செலுத்தி ரூ.10.29 கோடி வட்டி தள்ளுபடியாக பெற்று பயன்அடைந்துள்ளனர். இதுவரை இத்திட்டத்தை பயன்படுத்திடாத உறுப்பினர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இத்திட்டம் 30.9.2017 வரை நீட்டிக்கப்பட உள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுறவுத்துறையை கணினிமயமாக்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு வங்கி சேவையை சிறப்பாக அளித்து வருகின்றன. அக்டோபர் 2016 முதல் 4365 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு வலைதளத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு சிறப்பான வங்கியியல் சேவையை உறுப்பினர்களுக்கு அளித்து வருகின்றன.

பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் பொருட்டும், பயிர்க்கடன் தொகையிலிருந்து விவசாயிகள் செலவிடும் சாகுபடி செலவினங்களை பணமில்லா பரிவர்த்தனைகள் மூலம் செலவிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டும் இந்திய அரசு ரூபே விவசாயக் கடன் அட்டை திட்டத்தை செயல்படுத்துமாறு தெரிவித்துள்ளது. அதனடிப்படையில், தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூபே விவசாயக் கடன் அட்டை மே 2017ல் வழங்கப்பட உள்ளது. ரூபே விவசாயக் கடன் அட்டையைக் கொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகளின் ஏடிஎம்களிலும் பரிவர்த்தனை செய்துகொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு வழிவகுத்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு பொதுமக்களின் முழு நம்பிக்கையை பெற்றதை நிருபிக்கும் வகையில், கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் / வங்கிகள் முதல் மாநில வங்கி வரை 31.3.2017 அன்று ரூ.57,009.01 கோடி அளவிற்கு வைப்பீடுகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட வைப்புத்தொகை முறைப்படி முதலீடு மற்றும் கடன் வழங்கியதன் மூலமாக வருவாய் ஈட்டப்பட்டு வைப்புதாரர்களுக்கு எவ்வித தங்குதடையுமின்றி உடனுக்குடன் வட்டி வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியை தொடர்ந்து செய்வதுடன், மேம்படுத்தவும் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களிலும் முறைகேடுகளை தவிர்க்கும் பொருட்டு மண்டல இணைப்பதிவாளர்கள், சரகத் துணைப்பதிவாளர்கள், கள அலுவலர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர்களைக் கொண்ட பறக்கும்படை அமைத்து திடீர் ஆய்வு மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 74 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் துவக்கப்பட்டு, அதன் மூலம், 23.4.2017 வரை 23,984 மெ.டன் காய்கறிகள் ரூ.67.03 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையில் 110 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 297 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.483.38 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு நன்மை தரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளும் அம்மா மருந்தகங்களும் அதிக அளவில் துவங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் 32,715 முழுநேரம் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் கனிணிமயமாக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு நிர்வாக முறையில் அத்தியாவசியப் பொருட்களை எவ்வித குறைபாடுமின்றி வழங்கி சிறப்பாக செயலாற்றி வருகிறது. புதிய குடும்ப அட்டை பெற விண்ணப்பிக்க, முகவரி மாற்றம் செய்ய, புதிய பெயர் சேர்க்க, நீக்க, மொபைல் எண் மாற்றம் செய்ய www.tnpds.com என்ற இணையதளத்தின் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நியாயவிலைக் கடையில் என்னென்ன பொருட்கள் உள்ளன, கடையில், எவ்வளவு இருப்பு உள்ளது, நுகர்வோர்கள் வாங்கிய பொருட்களின் விவரம், கடை திறந்துள்ளதா இல்லையா என அறிதல், வாங்காத பொருட்களுக்கு எஸ்.எம்.எஸ். வருதல் போன்ற குறைகளை களைய 1967 / 18004255901 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி மூலம் புகார் தெரிவிக்கலாம்.

கூட்டுறவு நிறுவனங்களில் அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் இன சுழற்சி முறையில் உரிய வழிமுறைகளைப் முறையாக பின்பற்றி விரைவில் நிரப்பப்படும்.

முன்னதாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் திருவாரூர், திருவள்ளூர், அரியலூார் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மண்டல இணைப்பதிவாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ரூ.23.13 இலட்சம் மதிப்பில் 4 ஈப்புகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப்யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள், திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.எம்.மோகன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.அ.இராமலிங்கம், திரு.பா.பாலமுருகன், டாக்டர் நா.வில்வசேகரன், திரு.ம.அந்தோணிசாமி ஜான்பிட்டர், திருமதி வீ.தேவகி, திரு.கே.மாதவன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**